

சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர் கு. சின்னதுரை வேட்பு மனு தாக்கல் செய்தார். அப்போது ஒன்றிய செயலாளர்கள் அழகு வேல், சித்தார்த்தன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர் ரேவதி மாதேஸ்வரன் வேட்பு மனு தாக்கல் செய்தார். அப்போது தே.மலையரசன் எம்.பி., ஒன்றிய செயலாளர்கள் ஏ.விஜயகுமார், சக்கரவர்த்தி உடனிருந்தனர்.

திருவண்ணாமலை – கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# திருவண்ணாமலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, ஏப். 8-

திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த கழக மற்றும் கூட்டணி இயக்கத்தின் வேட்பாளர்களை ஆதரித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலையில் தேர்தல் பிரச்சாரம் செய்ய உள்ளார்.

இதுகுறித்து பொதுப் பணித்துறை அமைச்சரும், வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பதாவது:-

இன்று (8.4.2026 - புதன்கிழமை) சரியாக மாலை 5.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, மாநகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள கலைஞர் திடலில் திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, கள்ளக் குறிச்சி வடக்கு, தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த கழக மற்றும் கூட்டணி இயக்கத்தின் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.



பொதுக்கூட்டத்திற்கு வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு தலைமை வகிக்கிறார்.

வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தரணி வேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எ.வ.வேலுவையும், கீழ்பென்னாத்தூர் கழக வேட்பாளர் கு.பிச்சாண்டி, ரிஷிவந்தியம் கழக வேட்பாளர் வசந்தம் க.கார்த்திகேயன், செங்கம் கழக வேட்பாளர் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் கழக வேட்பாளர் பெ.சு.தி.சரவணன், வந்தவாசி கழக வேட்பாளர் எஸ்.அம்பேத்குமார், செய்யாறு கழக வேட்பாளர் ஒ.ஜோதி, ஆரணி கழக வேட்பாளர் கோ.மகாலட்சுமி, கள்ளக்குறிச்சி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் கு.மாலதி, போளூர் தே.மு.தி.க. வேட்பாளர் பி.சரவணன், உளுந்தூர்பேட்டை கழக வேட்பாளர் ஜி.ஆர். வசந்தவேல் ஆகியோரை ஆதரித்து, தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, கள்ளக்குறிச்சி மாவட்ட கூட்டணி இயக்கத்தைச் சேர்ந்த காங்கிரஸ், திராவிடர் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், தே.மு.தி.க., சி.பி.எம்., சி.பி.ஐ., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மையம், மனிதநேய மக்கள் கட்சி, எஸ்.டி.பி.ஐ., கொங்கு மக்கள் தேசியக் கட்சி, தமிழ்நாடு முன்னேற்றக் கழகம், இந்திய குடியரசுக் கட்சி, ஆதித்தமிழர் பேரவை, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் கட்சி, தந்தைப் பெரியார் திராவிடர் கழகம், தலித் விடுதலை இயக்கம், தமிழ்ப் புலிகள் கட்சி, சமத்துவ மக்கள் கழகம், ஆதித் தமிழர் கட்சி உள்ளிட்ட கூட்டணி இயக்க நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை வட்டக் கழக மற்றும் அணி சார்ந்த நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

நிறைவாக திருவண்ணாமலை மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மத்தியில் ஆளும் மோடி அரசு திட்டமிடாமல் ஆட்சி செய்கிறது!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டி!

பெரம்பலூர், ஏப்.08-

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் குன்னம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சக்திவேலிடம் வேட்பு மனுதாக்கல் செய்தார். அப்போது பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி குன்னம் தொகுதி மாவட்ட செயலாளர் அன்பானந்தன், தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் மாவட்டச் செயலாளர் முகம்மது இலியாஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

தொடர்ந்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போது, தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கு ஐந்தாவது முறையாகவும், குன்னம் சட்டமன்ற தொகுதியில் மூன்றாவது முறையாகவும் மனு தாக்கல் செய்திருப்பதாகவும். கடந்த ஐந்தாண்டுகளில் முதலமைச்சர் என்னை அமைச்சராகி இத்தொகுதிக்கு போதுமான திட்டங்களை பெற்றுத் தருவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார். அதன் அடிப்படையில் இப்பகுதி மக்களுக்கு அனைத்து திட்டங்களும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் நன்றி உணர்வோடு வாக்களித்து வெற்றி பெறச் செய்வார்கள் என தெரிவித்தவர்,

குன்னம் விவசாயம் சார்ந்த தொகுதி என்பதால் இங்கு விளையக்கூடிய மக்காச்சோளத்திற்கு மதிப்பு கூட்டல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் நிறுவனங்களை கொண்டு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மேலும் குன்னம், செந்துறை, லெப்பைகுடிக்காடு ஆகிய பகுதிகளுக்கு போக்குவரத்து நெரிசலை சரி செய்யும் வகையில் சுற்றுச்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன, வருகின்ற தேர்தல் முடிந்த பின்பு தி.மு.க. ஆட்சி வந்த உடன் அந்த திட்டங்கள் நிறைவேற்றப்படும் என தெரிவித்தவர், சமையல் கியாஸ் தட்டுப்பாடு குறித்து கேட்டபோது மோடி மத்தியில் திட்டமிடாமல் ஆட்சி செய்து வருகிறார். முன்னேற்பாடாக திட்டமிட்டு செயல்படாமல் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் சென்று திட்டமிடாமல் இருப்பதினால் இந்த வணிக எரிவாயு சிலிண்டர் கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது இதற்கு தமிழக முதல்வர் உணவகங்களுக்கு மின்சார அடுப்புகள் மற்றும் மின்சாரத்திற்கு மானியங்கள் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.



எடப்பாடி பழனிச்சாமி மறைந்த தலைவர் கலைஞர் பற்றி விமர்சனம் செய்வது குறித்து கேட்டபோது, எடப்பாடி பழனிச்சாமி முன்னாள் முதல்வராக இருந்ததை மறந்து விட்டு புரட்சித்தலைவர் எம்ஜிஆர் உருவாக்கிய ஜெயலலிதா வழி நடத்திய கட்சியை வைத்துக்கொண்டு அதற்கு சிறிதும் பொருத்தம் இல்லாமல் பேசி வருகிறார் என தெரிவித்தார்.

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

**(6 வது பட்டியல்)**

**தலைமைக் கழகம் அறிவிப்பு!**

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - | பார்வையாளர் |
|---|---|---|
| செங்கல்பட்டு | – | வழக்கறிஞர் ஜான் சாமுவேல் |
| விருகம்பாக்கம் | – | வி. பி. மணி |
| பல்லடம் | – | தென்றல் செல்வராஜ் |
| ராதாபுரம் | – | VSR. ஜெகதீசன் |
| கே வி குப்பம் | – | காசிமுத்துமாணிக்கம் |
| சேலம் தெற்கு | – | வழக்கறிஞர் சிவசுப்பிரமணியன் |
| திருச்சி கிழக்கு | – | கே.என்.சேகரன் |
| மணப்பாறை | – | வழக்கறிஞர் முரளிகிருஷ்ணன் |
| திருச்செங்கோடு | – | செ.காந்திசெல்வன் |
| பவானிசாகர் | – | எல்.பி. தர்மலிங்கம் |
| தாம்பரம் | – | வழக்கறிஞர் அருண் |
| அவினாசி | – | வழக்கறிஞர் பாபு ராஜாராம் |
| மதுரை தெற்கு | – | வ.வேலுசாமி |
| செய்யூர் | – | க. அன்பு செல்வன் |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 06.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இசைமுரசு நாகூர் அனிபா

**ஏப்ரல் 8 (2015)**



தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் தமது காந்தர்வ இசையால் – 'கணீர்' குரலால் – "அழைக்கின்றார்... அழைக்கின்றார்... அண்ணா", "ஓடி வருகிறான்.. உதயசூரியன்", "கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!" போன்ற கருத்தாழமிகு பாடல்களால் கழகக் கொள்கைகளைப் பரப்பி வந்த தூய தொண்டர்.

1952–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நடத்திய கழகத்தின் முதல் மாநாடு தொடங்கி, அனைத்து மாநாடுகளிலும் இயக்கப் பாடல்களை பாடியவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற உயிரனைய தோழர்.

'இசைமுரசு' எனும் அடைமொழியால், அகிலத்தவரால் அன்பு தவழ அழைக்கப்பட்டவர்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

முரசொலி அறக்கட்டளை சார்பில் 2002ஆம் ஆண்டுக்கான "கலைஞர் விருதும்", ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழியும் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டார்.


"தன்னுடைய பாடல்கள் மூலம் கழகத் தொண்டாற்றிய இசைமுரசு அனிபா மறைந்தாரே, அவர் புகழ் ஓங்குக!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா அருணாசலம்

**ஏப்ரல் 8 (1981)**



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராகி, புதுக்கோட்டையின் முதல் நகரச் செயலாளராகவும், நீண்டகாலமாக பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

மும்முனைப் போராட்டத்தில் பங்கேற்றதோடு, மிசா கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் உரையாற்றும்போது "எனது அருமை நண்பர் மிசா அருணாசலம்" என்று நினைவு கூர்ந்து குறிப்பிடுவதே இவருக்குரிய புகழாரமாக அனைவரும் கருதுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**